டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

அக்ரி-டாக்டர்



மின்னிதழில் குறைந்த செலவில்

விளம்பரம்

செய்து பயன்பெற

தொடர்புக்கு

80563 05483 • 93602 23193

agridoctor.in | 12.7.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 022 - Madurai | Online Edition

## மதுரையில் இன்று

# மீன்வளர்ப்புத் துறைகளின் கோடைகால சந்திப்பிற்கு மீன்வளத்துறை ஏற்பாடு

புது தில்லி, ஜூலை 11

நாட்டில் சுமார் 3 கோடி மீனவர்களுக்கும், மீன்வளர்ப்புத் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் மீன்வளர்ப்புத் தொழில் வாழ்வாதாரத்தையும், வேலைவாய்ப்பையும் அளிக்கிறது. உலக அளவில் மீன் உற்பத்தித் துறையில் 8 சதவீத பங்களிப்புடன் இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. மீன்வளர்ப்புத் துறையில் 2-வது இடத்தில் உள்ளதுடன், இறால் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. மீன் பிடிப்பில் 3-வது பெரிய நாடாக உள்ளது.

இந்நிலையில், மீனவர்கள், மீன் சார்ந்த தொழிலில் ஈடுபடு வோர் ஆகியோரின் பங்களிப்பை வெளிப்படுத்தவும் மீன் வளர்ப்புத் துறையின் வளர்ச்சிக்காகவும், மீன் வளர்ப்புத் துறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தமிழ்நாட்டின் மதுரையில் இன்று மீன்வளர்ப்புத் துறை கோடைகால சந்திப்பிற்கு மீன்வளத்துறை ஏற்பாடு செய்துள்ளது.

மத்திய மீன் வளர்ப்பு, கால்நடைப் பராமரிப்பு, பால்வளத்துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் தலைமையில் இணை அமைச்சர்கள் பேராசிரியர் எஸ்.பி.பாகெல், ஜார்ஜ் குரியன், தமிழ்நாடு மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதா கிருஷ்ணன் ஆகியோர் இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர். மீன்வளர்ப்புத் துறையில் ஈடுபடுவோர், ஆராய்ச்சியாளர்கள், தொழில் நிபுணர்கள், தொழில்முனைவோர் ஆகியோர் மீன் வளர்ப்புத்துறை வளர்ச்சிக்கான தங்களது கருத்துக்களையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள உள்ளனர். பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் குறித்து இம்மாநாட்டில் எடுத்துரைக் கப்பட உள்ளது.

மீன் பற்றிய கண்காட்சி, அமைச்சர்களுக்கு இடையேயான விவாதங்கள், காணொலிக் காட்சி வாயிலாக மீன்வளத் திட்டங்கள் தொடக்கம், மீனவர்களுடனான உரையாடல், பயனாளிகளுக்கு வேளாண் கடன் அட்டை வழங்குதல் உள்ளிட்டவை மாநாட்டில் இடம் பெற உள்ளது.

மீன்வளத் துறையில் தங்களுக்கான வளர்ச்சி, சவால்கள், வாய்ப்புகள், எதிர்கால நடவடிக்கைகள் குறித்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்ள மீன்வளர்ப்புத்துறை கோடைகால சந்திப்பு 2024 வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதில் மீன்வளத்துறையின் பல்வேறு திட்டங்கள், கொள்கைகள் குறித்து இணைச் செயலாளர் உரையாற்றவுள்ளார். மத்திய மீன்வளத்துறை, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் மீன்வளத் துறைகளுக்கான முக்கிய தேவைகள் குறித்தும் அவற்றை அமல்படுத்துவது குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பருத்தி சாகுபடியில் பசுந்தாள் பயிர் மூலம் ஊட்டச்சத்து மேலாண்மை!

பசுந்தாள் உரம் என்பது பசுமையான சிதைக்கப்படாத பயிர்களை உரமாக பயன்படுத்துதல் ஆகும். பசுந்தாள் உர பயிர்களை (சணப்பு அல்லது தக்கைப் பூண்டு) இரண்டு பரிந்துரைக்கப்பட்ட பருத்தி பயிரின் வரிசைகளுக்கு இடையில் பயிரிட்டு, பின் போதுமான வளர்ச்சி அடைந்தவுடன் அதாவது விதைத்ததில் இருந்து 45 நாட்கள் கழித்து அல்லது உரப்பயிர் 50 சதவீதம் பூ பூத்தவுடன் மண்ணில் மடக்கி உழவேண்டும். பருத்தி பயிருக்கு இடையில் ஒரு வரிசையில் ஊடுபயிராக பசுந்தாள் உரப் பயிர்களை நடுவதன் மூலம் 16 சதவீதம் பருத்தி கபாஸ் மகசூலை அதிகரிக்கலாம். 33 சதவீதம் களை வளர்ச்சியை தடுக்கலாம் மற்றும் மண்ணின் வளத்தை மேம்படுத்தலாம்.

**நன்மைகள்**

மண் கட்டமைப்பை மேம்படுத்தும், நீர் பிடிப்பு கொள்ளளவை அதிகப்படுத்தும் மற்றும் மண் அரிப்பினால் ஏற்படும் இழப்பைக் குறைக்கும். என சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ஹனீஷா தெரிவித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# விவசாய உணவு பொருட்களுக்கான ஏற்றுமதி பயிற்சி



விருதுநகர், ஜூலை 11

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டாரம், ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் 11.7.24 அன்று நடைபெற்ற பயிற்சியில் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் உழவர் பயிற்சி நிலையம் த.வளர்மதி கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார். உரையில் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல் மற்றும் வேளாண்மையில் அதிக லாபம் ஈட்டுதல் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.




வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கு.தனலட்சுமி, தலைமை உரையில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம், மாநிலத் திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்படும் மானியங்கள் மத்திய அரசின் வளர்ச்சி திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். கூட்டத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வணிக துறையின் சார்பாக கலந்து கொண்ட மகாலட்சுமி, வேளாண் இடுப்பொருட்களை மதிப்பு கூட்டுதல், வேளாண் இடுபொருட்களை இணையம் வழி விற்பனை செய்தல், வேளாண் இடுப்பொருட்களுக்கு நல்ல விலை கிடைத்தல், வேளாண் இடுபொருட்களை இருப்பு வைத்து விற்பனை செய்தல், ஆகியவை குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் நாராயணன் நன்றி உரை வழங்கினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# ஆர்ஏடி ஐஎப்எஸ் தொழில்நுட்ப விவசாயிகள் பயிற்சி முகாம் நடைபெற்றது



திண்டுக்கல், ஜுலை 11

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார் சத்திரம் வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் தருமத்துப்பட்டி கிராமத்தில் ஆர்ஏடி ஐஎப்எஸ் தொழில்நுட்ப விவசாயிகள் பயிற்சி முகாம் நடைபெற்றது. இப்பயிற்சிக்கு தருமத்துப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் செந்தில் தலைமை வகித்தார். எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி மைய முதுநிலை ஆராய்ச்சியாளர் டாக்டர் செல்வமுகிலன் விவசாயிகள் கூட்டு பண்ணைய முறையில் விவசாயம் செய்தல் மற்றும் ஆடு மாடு வளர்ப்பு மற்றும் இயற்கை முறையில் பண்ணையம் செய்வது பற்றி விளக்கி கூறினார். இப்பபிற்சியில் உதவி வேளாண்மை அலுவலர் நாகராஜன் வேளாண்மை துறை திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி விவசாயிகள் அனைவரும் மண்பரிசோதனை செய்து அதன்படி உரமிட வலியுறுத்தினார். உதவி வேளாண்மை அலுவலர் ராஜி இப்பயிற்சியில் கலந்து கொண்டு விவசாயிகள் பயன் பெறுமாறு கூறினார். இப்பயிற்சிக் கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.




# நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் வெளிவளாக பயிற்சி



கடலூர், ஜூலை 11

நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி 11.7.24 அன்று திருமலை அகரம் கிராமத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முக்கிய குறிக்கோள்கள் மற்றும் அதிக மகசூல் தரும் உயர்தர இரகங்கள் பற்றியும், விதை உற்பத்தி செய்யும் முறைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். முனைவர் ஜெ.ஜெயகுமார் விவசாயிகளுக்கு நெல்லில் காணப்படும் பூச்சி நோய் தாக்குதலும் அதன் மேலாண்மை பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்.




ஒருங்கிணைந்த பயிர் பராமரிப்பு மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை ஆகியவை விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் செயல்முறையாகவும் காண்பிக்கப்பட்டது. தவேபக இணையத்தள செயலிகள் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் முறைகள் பற்றி விளக்கமாக கூறப்பட்டது. பயிர் காப்பீட்டு திட்டம் பற்றிய விளக்கங்களை வங்கி கள பணியாளர்கள் எடுத்துரைத்தனர். இறுதியாக விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகளிடம் தனது ஐயங்களை கேட்டு தெளிவு பெற்றனர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்ட சேர்ந்த நல்லூர் வட்டாரத்தில் உள்ள திருமலைஅகரம் கிராமத்தில் உள்ள விவசாயிகள் 60 க்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.

# காரீப் பருவ பயிர்களுக்கு காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

மதுரை, ஜூலை 11

வேளாண்மை – உழவர்நலத்துறை மூலம் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத்திட்டம் நடப்பு 2024-25ம் ஆண்டு காரீப் பருவத்திற்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பருவத்திற்குரிய பயிர்களான நெல் I பயிருக்கு ரூ.712, மக்காச்சோளம் பயிருக்கு ரூ.588, பருத்தி பயிருக்கு ரூ.200, நிலக்கடலை பயிருக்கு ரூ.530 மற்றும் பச்சை பயிறு பயிருக்கு ரூ.308, காப்பீட்டு கட்டணமாக விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு செலுத்த வேண்டும். இந்த திட்டத்தில் பயிர்க்கடன் பெற்றுள்ள விவசாயி களாக இருந்தால், சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும், பயிர்க்கடன் பெறாத இதர விவசாயிகள் தங்கள் அருகில் உள்ள பொது சேவை மையங்களிலும் (இ-சேவை மையங்கள்) காப்பீடு செய்து கொள்ளலாம்.

நடப்பு காரீப் பருவத்தில் நெல் I பயிருக்கு பயிர் காப்பீடு செய்ய ஜீலை 31ம் தேதி கடைசி நாள் ஆகும். மக்காச்சோளம் I, பருத்தி I மற்றும் பச்சை பயிறு பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய செப்டம்பர் 30ம் தேதி கடைசி நாள் ஆகும். நிலக்கடலை பயிருக்கு பயிர் காப்பீடு செய்ய செப்டம்பர் 16ம் தேதி கடைசி நாள் ஆகும். இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யும்போது முன்மொழிவு படிவம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் 1434ம் பசலிக்கான நெல் I, மக்காச்சோளம் I மற்றும் பருத்தி I, நிலக்கடலை, பச்சை பயிறு சாகுபடி அடங்கல், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து பிரீமியத் தொகையை காப்பீடு செய்து அதற்குரிய ரசீதை பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, விவசாயிகள் இறுதிநேர நெரிசலை தவிர்ப்பதற்கும், தங்களுடைய விண்ணப்பங்கள் விடுபடாமல் இருக்கவும், பதிவு செய்த விவரங்களை சரிபார்ப்பதற்கும் விவசாயிகள் முன் கூட்டியே உரிய தேதிக்குள் பயிர் காப்பீடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# உச்சிப்புளி வட்டாரத்தில் மண்புழு உர உற்பத்தி பயிற்சி



இராமநாதபுரம், ஜூலை 11

இராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புளி வட்டாரத்தில் 2024-25 ஆம் நிதியாண்டில் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் கலைஞரின் அனைத்து கிராமம் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் நடப்பாண்டில் தேர்வாகியுள்ள கும்பரம் கிராமத்தில் 40 விவசாயிகளுக்கு மண்புழு உர உற்பத்தி சம்பந்தமாக பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் வேளாண்மை அலுவலர் சபிதா பேகம், மண்புழு உர உற்பத்தி முறைகள், மண்புழு இரகங்கள் தேர்ந்தெடுத்தல், உரம் தயாரிக்க உகந்த கழிவுகள், தண்ணீர் தெளிக்கும் முறை, மண் புழு உர அறுவடை, மண் புழு உரத்தின் நன்மைகள் குறித்து விளக்கி கூறினார். மேலும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை திட்டங்கள் பற்றி விரிவாக கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் பானுமதி விவசாயிகளிடம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மண்ணுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பசுந்தாள் உர விதைகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளது. மேலும் மண் பரிசோதனை செய்வதன் முக்கியத்துவம் குறித்து விளக்கிப் பேசினார்.

மேலும் விவசாயிகளுக்கு உழவன் செயலியின் பயன்பாடு மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் பணமில்லா பரிவர்த்தனை குறித்து தொழில்நுட்ப கருத்துக்களை உதவி தொழில்நுட்ப மேலாளர் பவித்ரன் விளக்கி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உச்சிப்புளி வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# கோடை கால பயறுவகைப் பயிர்கள் மற்றும் எண்ணெய் வித்துக்களில் நீர்ப்பற்றாக்குறையினை நிர்வாகம் செய்வது குறித்த விவசாயிகள் பயிற்சி

அரியலூர், ஜூலை 11

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் (அட்மா) மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் கோடை கால பயறுவகைப் பயிர்கள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளும்போது ஏற்படும் நீர்ப்பற்றாக்குறையினை மேலாண்மை செய்யும் முறைகள் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டுவரும் இடையார் கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் சுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றது.

கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தொழில் நுட்ப வல்லுநர் அசோக்குமார் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம், போன்ற திட, திரவ உயிர் உரங்களை வயலில் இடுவதால் நுண்ணுயிர்கள் பெருகி மண்வளம் பாதுகாக்கப்பட்டு மகசூல் அதிகரிப்பது குறித்தும் நுண்சத்து இடுவதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினார். மேலும் பயறுவகைப் பயிர்களில் பூக்கும் பருவத்தில் 2 கிலோ பயறு ஒண்டர் பயிர் வளர்ச்சி ஊக்கியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒட்டும் திரவம் சேர்த்து தெளிப்பதால் பயிர் வறட்சியைத் தாங்கி வளர்வதுடன் பூக்கள் உதிர்வது தடுக்கப்பட்டு மகசூல் அதிகரிக்கும் எனவும் நிலக்கடலையில் பயிர் வறட்சியைத் தாங்கி வளரவும் பூக்கள் உதிர்வது தடுக்கப்பட்டு 20 சதம் கூடுதல் மகசூல் பெறவும் நிலக்கடலை ரிச் எனும் பயிர் வளர்ச்சி ஊக்கியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒட்டும் திரவம் சேர்த்து பூக்கும் பருவத்திலும் விழுது இறங்கி காய் பிடிக்கும் பருவத்திலும் தெளிக்க வேண்டும் எனவும் விளக்கினார். கோடை உழவு செய்து மண்ணின் நீர் பிடிப்புத் தன்மையை அதிகரித்தல், பசுந்தாள் உரப் பயிர்கள் சாகுபடி செய்து மண்ணில் மடக்கி உழுதல் மற்றும் நிலப் போர்வை அமைத்தல் ஆகிய தொழில் நுட்பங்களை கடைபிடிப்பதன்

மூலம் பயிருக்குத் தேவையான நீர்த்தேவையினை நிவர்த்தி செய்யலாம் எனவும் மண் ஆய்வு பரிந்துரைப்படி உரமிட்டு இரசாயன உர பயன்பாட்டினைக் குறைப்பது குறித்தும் பயறுவகைப் பயிர்கள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களில் களை நிர்வாகம், நீர் நிர்வாகம், உர நிர்வாகம், அங்கக முறை பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.

இக்கிராமத்தின் கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட பொறுப்பு அலுவலர் மகேஸ்வரி கலந்து கொண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் குறித்தும், தோடடக்கலைத்துறை செயல்படுத்தி வரும் அரசுத் திட்டங்களின் மானிய விபரங்கள் குறித்தும் விளக்கினார்.




திருத்தியமைக்கப் பட்ட பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் குறித்து திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் வீரமணி விளக்கி விவசாயிகளுக்கு துண்டுப் பிரசுரங்களை வழங்கினார். வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும், உழவன் செயலி பதிவிறக்கம் செய்து இடுபொருட்கள் முன்பதிவு குறித்தும் விளக்கினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் மகேஷ்குமார், ஆரோக்கியராஜ், ஊராட்சி மன்றத் தலைவரும் வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழு உறுப் பினருமான ஐயப்பன், பெண் முன்னோடி விவசாயி வள்ளி ஆகியோர் செய்திருந்தனர். இப்பயிற்சியில் இடையார் கிராம முன்னோடி விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# இப்கோ – சங்கட ஹரன் பீமா யோஜனா

இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா மூலம் விவசாயிகள் இலவச விபத்துக் காப்பீடு பெறும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் கீழ் இப்கோ நானோ உரங்கள் (நானோ யூரியா, நானோ டிஏபி) மற்றும் இப்கோ யூரியா, டிஏபி, காம்ப்ளக்ஸ் உரங்களுடன் விவசாயிகள் இலவச விபத்துக் காப்பீடு பெறலாம்.



ஒரு பாட்டில் நானோ உரம் வாங்கினால் ரூ.10000 காப்பீடு. அதிகபட்சம் ரூ.2 லட்சம் வரை காப்பீடு பெறலாம் (ஒரு வருடத்திற்கு 20 பாட்டில் நானோ உரம் வரை காப்பீடு பெறலாம்).

- ADVT.

# பெருந்துறை வட்டாரத்தில் பயறுவகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பயிற்சி

ஈரோடு, ஜுலை 11

ஈரோடு வட்டாரம், பெருந்துறை வட்டாரம் வேளாண்மை – உழவர் நலத்துறை கீழ், செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் பாப்பம்பாளையம் வருவாய் கிராமத்தில் 10.7.24 அன்று உழவர்களுக்கு பயறுவகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த தொழில்நுட்ப பயிற்சி பெருந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் க.பிரசாத் தலைமையில் நடைப்பெற்றது. அவர் பேசுகையில், பயறுவகை பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தும் முறை குறித்தும் தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மானிய விவரங்கள் பற்றியும் தெளிவாக விளக்கினார். மேலும் ஜே.ஜே.எம் உதவி பேராசிரியர் முனைவர் சு.போஜராஜ், கலந்து கொண்டு பேசுகையில் பயறுவகை பயிர்களில் முக்கிய பூச்சிகள் மற்றும் நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளை அடையாளம் காணுதல், மேலாண்மை அலகு மற்றும் சுற்றுச்சூழல் வரையறுத்தல் பொருளாதார வரம்புகளை உருவாக்குதல், பூச்சி மாதிரிகளை உருவாக்குதல் மற்றும் மேலாண்மை முறைகளின் நோக்கங்கள் பற்றி கூறினார்.

இப்பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் அருள் மொழிவர்மன் பேசுகையில் துவரை வரிசை நடவு முறைகள் பற்றியும் தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் வேளாண் கிடங்கில் உள்ள இடுபொருட்களின் மானிய விவரங்கள் பற்றியும் எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் கலைச்செல்வி பேசுகையில் PM Kissan பற்றிய விவரங்களை கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் விசுவநாதன் ற்றும் தாமோதரன் அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடு களை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

# மல்லிகையில் புழுக்கள் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழி முறைகள் தெரியுமா?



தற்போது மல்லிகை பூவின் விலை நாளுக்கு நாள் உயர்ந்த நிலையில் பூ வரத்து குறைந்து அதிலும் பூக்களில் பாதிக்கு மேல் நிறம் மாறி கறை கறையாக மாறி பூக்கள் வீணாகி, பெரும் இழப்பை எற்படுத்துவதால், விவசாயிகள் கைக்கு எட்டியும் காசு வரவில்லை என வருந்திய நிலையில் தான் உள்ளனர். இதனால் இந்த மாதிரியான அழுகிய பூக்களை கடைசியில் பறித்து குப்பைகளில் கொட்டும் நிலைதான், தற்போது பூ விவசாயிகளிடம் பெரும் கவலையாக உள்ளது. மல்லிகை பூ மலர்ந்தாலும் பூ விவசாயிகளின் வாழ்வு மலரவில்லை. கண்ட கண்ட பூச்சிமருந்துகளை தெளித்து கடனாளிகளாக தான் பெரும்பாலான விவசாயிகள் வாழ்ந்து வருகின்றனர் என்பது வேதனைக்குரிய தகவலாகும்.

**இதற்கு தீர்வு என்ன?**

மல்லிகை ஒரு வகையான புதர் செடி வகை பயிராகும். அவ்வப்போது கவாத்து செய்ய வேண்டும். குறிப்பாக இந்த காலத்தில் மொக்கு துளைப்பான், இலை பிணைக்கும் புழு, வெள்ளை ஈ, சிவப்பு பயிர் சிலந்தி போன்ற பூச்சிகளால் மல்லிகை அதிகமாக பாதிக்கப்படும். இதனை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும்.

**அது எப்படி என்பதை பார்ப்போம்?**

1) வேப்பங்கொட்டை 5% கரைசல் தெளிப்பு.

நன்றாக காய்ந்த 5 கிலோ வேப்பங்கொட்டையை தூளாக்கி, சாக்குத்துணியில் கட்டி 10 லிட்டர் தண்ணீரில் 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். வடிகட்டிய கரைசலை தண்ணீர் கலந்து 200 லிட்டராக மாற்றவும். இதனுடன் ஓட்டும் திரவத்தை கலந்து தெளிக்கலாம்.

**2) விளக்கு பொறி வைத்தல்**

ஒரு விளக்கு பொறி வைப்பதன் மூலமாக தாய் அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.

3) பூக்க ஆரம்பித்த ஒரு வாரத்தில் பேசில்லஸ் உயிர் பூஞ்சான கொல்லியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் கலந்து தெளிக்க வேண்டும்.

4) ஸ்பைனோசேடு 0.5 மில்லி மற்றும் தைக்ளோப்ரைடு 1 மில்லி ஒரு லிட்டரில் கலந்து தெளிக்கலாம்.

இவ்வாறாக ஒரு வார இடைவெளி விட்டு மாற்றி மாற்றி தெளிப்பதன் மூலமாக மொக்கு புழு மற்றும் சிலந்தி வகைகளை கட்டுப்படுத்தலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணைய பயிற்சி



விருதுநகர், ஜூலை 11

விருதுநகர் மாவட்டம், வெம்பக் கோட்டை வட்டாரம் மம்சாபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை விரிவாக்க சீரமைப்புத்திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்குள் பயிற்சி ஒருங்கிணைந்த பண்ணையம் என்ற தலைப்பில் வேளாண்மை உதவி இயக்குநர் வெம்பக்கோட்டை தலைமையில் நடைபெற்றது. பயிற்சியில் மம்சாபுரம் பஞ்சாயத்து தலைவர் த.மாரியம்மாள் சிறப்பு விருந்துநராக கலந்து கொண்டார்.

இப்பயிற்சியில் வேளாண்மை துணை இயக்குநர் மத்திய திட்டம் சுமதி, கலந்து கொண்டு ஒருங்கிணைந்த பண்ணையம் தொடர்பாக சிறப்புரையாற்றினார். வேளாண்மை அலுவலர் அண்ணபூரணி, உயிர் உரங்கள் நுண்ணூட்ட கலவை பயன்பாடுகள் மற்றும் வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பாக எடுத்துரைத்தார். தூண்டில்காளை, தொழில்நுட்ப வல்லுநர், ஒருங் கிணைந்த பண்ணையம் மற்றும் மண்வளம் தொடர்பாக பயிற்சி அளித்தார். முத்துசரவணன், வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறை, வேளாண் சந்தை மற்றும் மதிப்புகூட்டுதல் தொழில்நுட்பங் கள் குறித்து விளக்கினார். மாவட்ட தொழில் மையம் சுதாகர், சிறு குறு வேளாண் தொழில்கள் துவங்குவது தொடர்பாக எடுத்துரைத் தார். கருப்பசாமி, உதவி வேளாண்மை அலுவலர், மண் மாதிரி எடுத்தல் மற்றும் தொகுப்பு திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் பெருமாள்சாமி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் சுரேஷ் ஆகியோர் செய்திருந்தனர்.

# விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை பயன்படுத்தி பயிர் உற்பத்தியை பெருக்கும் பயிற்சி



சேலம், ஜூலை 11

சேலம் மாவட்டம், பெத்த நாயக்கன்பாளையம் வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி உமையாள்புரம் கிராமத்தில், பயறு வகை பயிர்களில் சான்று பெற்ற விதை நேர்த்தி விதைகளை பயன்படுத்தி உயிர் உற்பத்தியை பெருக்கும் தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் தலைமையில் இன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் விவசாயிகளுக்கு சிறப்பு வகுப்பு எடுப்பதற்காக டாக்டர் நடராஜன், இணைப் பேராசிரியர், மரவள்ளி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூரில் இருந்து வருகை புரிந்தார். இப்பயிற்சிக்கு அட்மா திட்டத்தின் உறுப்பினர் சிவக்குமார், முன்னிலை வகித்தார்.

பயறு வகை பயிர்களில் சரியான விதைத்தேர்வு, விதை நேர்த்தி பயிர் உற்பத்தி போன்ற அனைத்தையும் விவசாயி களுக்கு மிகத் தெளிவாக இணை பேராசிரியர் நடராஜன் எடுத்துக் கூறினார். மேலும் இக்கூட்டத்திற்கு டாக்டர் மஞ்சு ரேகா, கால்நடை துறை மருத்துவர், யுவராஜா, உதவி ஆய்வாளர் பட்டு வளர்ச்சி துறை, சுமித்ரா, வேளாண் வணிகத்துறை, ஆகியோர் அந்தந்த துறை சார்ந்த திட்டங்கள் குறித்து விளக்கமாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

இக்கூட்டத்தில் ஜான்சி ராணி, தோட்டக்கலை அலுவலர், மௌலிதரன் வேளாண்மை அலுவலர், செல்லமுத்து உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் காமராஜ் தோட்டக்கலை உதவி அலுவலர் ஆகியோர் கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் மற்றும் அனைத்து திட்டங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்கள்.

இப்பயிற்சியில் கலந்து கொண்ட 40-க்கும் மேற்பட்ட விவசாயி களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. மேலும் இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட பணியாளர்கள் கோகிலப்பிரியா, ராஜ்குமார் மற்றும் பிரியங்கா ஆகியோர் செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# கிருஷ்ணகிரி வட்டார விவசாயிகள் காரீப் பருவ பயிர்களுக்கு காப்பீடு செய்ய அழைப்பு

கிருஷ்ணகிரி, ஜுலை 11

கிருஷ்ணகிரி வட்டாரத்தில் காரீப் பருவ சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது. இந்நிலையில் பிரதம மந்தரி பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டு 2024-25 காரீப் பருவத்திற்கான நெல் மக்காசோளம், துவரை, நிலக்கடலை மற்றும் ராகி பயிர் களில் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் காப்பீடு செய்யலாம். ஆறிவிக்கப்பட்ட பயிர்களில் குத்தகையில் சாகுபடி செய்யும் விவசாயிகளும் பயன்பெற தகுதியானவர்கள் ஆவர்.

விவசாயிகள் உட்பட அனைத்து பயிர் கடன் பெறும் விவசாயி களும் இதில் சேர்த்துகொள்ளப்படுவர். மற்ற விவசாயிகள் தங்கள் விருப்பத்தின் பேரில் சேரலாம். விதைப்பு தவிர்த்தல், விதைப்பு தோல்வியுறுதல் பயிரிட அபாயம் ஏற்படும் சூழ்நிலையில், விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள பயிர்காலத்தில் பயிர் இழப்பு அறுவடைக்குப்பின் ஏற்படும் மகசூல் இழப்பு, புயல் ஆலங்கட்டி மழை, மண் சரிவு, வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகளில் ஏற்படும் பயிர் இழப்பு ஆகியவற்றிக்கு காப்பீடு வழங்கப்படுகிறது.

**பயிர் காப்பீடு செய்ய தேவைப்படும் ஆவணங்கள்**

முன்மொழிவு படிவம், சிட்டா அடங்கல் (அ) பயிர் சாகுபடி சான்று, ஆதார் அட்டை மற்றும் வங்கி கணக்கு புத்தக முன் பக்க நகல், பயிர் காப்பீடு தொகை.

**பிரீமியம் தொகை மற்றும் காலக்கெடு :** நெற்பயிருக்கு ஏக்கருக்கு காப்பீடு பரீமியம் கட்டணமாக நெற்பயிரக்கு ரூ.371, சோளம் ரூ.196, ராகி ரூ.228, துவரை ரூ.308, உளுந்து ரூ.308, பச்சைபயறு ரூ.426, நிலக்கடலை ரூ.426 ஆகும். நெல் பயிருக்கு - ஜுலை 31 மற்றும் நிலக்கடலை பயிர்களுக்கு ஜுலை 18, ராகி பயிருக்கு ஆகஸ்ட் 16ம் தேதியும், துவரை பயிருக்கு செப்டம்பர் 16ம் தேதியும் மற்றும் இதர பயிர்களுக்கு 30ம் தேதியும் பயிர் காப்பீடு செய்ய காலக்கெடு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. எனவே காரீப் பருவ பயிர்களை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இத்திட்டத்தல் பெருமளவில் சேர்ந்து பயனடையு மாறு கிருஷ்ணகிரி வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# பருத்தி இலைப்பேன் கட்டுப்பாடு முறைகள்!

### இலைப்பேன் திரிப்ஸ் டபேசி பூச்சியின் விபரம்

குஞ்சுகள் மிகச் சிறியதாக, தட்டையாக, மஞ்சள் நிறத்தில் காணப்படும். வளர்ந்த பூச்சிகள் சிறியதாக, தட்டையாக, மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில் பேன் போன்று காணப்படும்.

### அறிகுறிகள்

இலைகளின் சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் சுருங்கி விடும். நுனி மொட்டுகளை தாக்குவதால் ஒழுங்கற்ற நுனிகளுடன் காணப்படும். இலையின் அடிப்புறத்தில் வெள்ளை நிறமாக காணப்படும். இளஞ்செடிகளின் வளர்ச்சி குன்றும், பூக்கள், மொட்டுகள் உதிர்ந்து விடும்.




### கட்டுப்பாடு

இமிடாகுளோபிரிட் 70 WS -7 கிராம் / கிலோ என்ற அளவில் விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்யவேண்டும். பின்வரும் பூச்சிக் கொல்லிகளின் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கலாம். (எக்டருக்கு) இமிடாகுளோரிட் 17.8% SL @ 100 மி.லி மித்தைல் டெமட்டான் 25 EC 500 மிலி டைமெத்தோயேட் 30 EC 500 மிலி வேப்பங்கொட்டைச் சாறு 5% கரைசல் மற்றும் ஒருங் கிணைந்த பூச்சிக்கட்டுப்பாட்டு முறைகளையும் கடைபிடிக்க வேண்டும் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வேளாண்மை உதவி இயக்குநர் வேலு தெரிவித்தார்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# பயறுவகைப் பயிர்களில் சான்று விதையின் பயன்பாடு, விதை நேர்த்தி மற்றும் உற்பத்தி மேம்பாட்டு தொழில்நுட்ப பயிற்சி

மதுரை, ஜூலை 11

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் 2024-25ம் ஆண்டு நிதியின் கீழ் கவுண்டன்பட்டி கிராமத்தில் பயறுவகைப் பயிர்களில் சான்று விதையின் பயன்பாடு, விதை நேர்த்தி மற்றும் உற்பத்தி மேம்பாட்டு தொழில்நுட்பம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 10.7.24 அன்று மா.விமலா ஒருங்கிணைப்பாளர் / வேளாண்மை உதவி இயக்குநர் தலைமையில் நடைபெற்றது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் ம.ஹேமலதா வரவேற்புரை ஆற்றினார்.

ஓய்வு பெற்ற வேளாண்மை அலுவலர் குணசேகரன், பயறுவகை பயிர்களில் சான்று விதையின் முக்கியத்துவம், உயிர் பூஞ்சாணக்கொல்லி டிரைக்கோடெர்மா விரிடி மூலம் விதை நேர்த்தி செய்தல், 2% டி.ஏ.பி கரைசல் தெளித்து பயறுவகை பயிர்களில் அதிக மகசூல் பெற்றிடலாம். பயறுவகைப் பயிர்களைத் தாக்கும் காய்துளைப்பான் புழுக்களை கட்டுப்படுத்த இனக்கவர்சிப்பொறி ஏக்கருக்கு 4 எண்கள் வீதம் வைத்து கட்டுப்படுத்தலாம் அல்லது பறவை தாங்கி ஏக்கருக்கு 20 எண்கள் வீதம் வைத்தும் கட்டுப்படுத்தலாம் எனவும் விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

வேளாண்மை அலுவலர் சு.சரவணக்குமார், கலைஞரின் திட்டம் குறித்தும், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் பற்றியும், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம், பலன்தரும் பருத்தி சாகுபடி திட்டம் மற்றும் வேளாண்மைத் துறையின் மானிய திட்டங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

பயிர் இரகங்கள் தேர்வு மற்றும் விதை நேர்த்தி செய்வதன் அவசியம், பயறுவகைப் பயிர்களில் உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்தும் உதவி வேளாண்மை அலுவலர் ச.கண்ணன், தொழில்நுட்ப உரை வழங்கினார். தோட்டக்கலைத்துறையின் மானியத் திட்டங்கள் குறித்து உதவி தோட்டக்கலை அலுவலர் து.கண்ணன் கூறினார்.

தே.கல்லுப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மா.விமலா, கலைஞர் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இடு பொருட்களை விவசாயிகள் வாங்கி பயன் பெறுமாறும், நுண்ணூட்ட உரக்கலவையின் பயன்கள் மற்றும் உபயோகம் மற்றும் பயிர்க் காப்பீடு செய்வதன் அவசியம் குறித்து விளக்கி பேசினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் பா.மாரிமுத்து, விதை நேர்த்தி செய்வது குறித்து செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.

இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். உதவி தொழில்நுட்ப மேலாளர் கா.ஜெகன் பாண்டி பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயி களுக்கு நன்றியுரை வழங்கினார்.



# வேளாண்மை துணை இயக்குனர் திட்ட பணிகளை ஆய்வு செய்தார்



தஞ்சாவூர், ஜூலை 11

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் வட்டாரத்தில் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் வழங்கப் பட்ட பசுந்தாள் உர விதைகள் விநியோகம் மற்றும் வயலில் விதைப்பு மேற் கொண்டுள்ள பணி ஆகியவற்றை திடீர ஆய்வு மேற்கொள்வ தற்காக மதுக்கூர் வடக்கு கிராமத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது வேளாண் உதவி அலுவலர் பூமிநாதன் அப்பகுதியில் 10 ஏக்கருக்கு பசுந்தாள் உரவிதை வழங்கப்பட்டு விதைக்கப்பட்டதை ஆய்வு செய்தார். மதுக்கூர் வடக்கு கிராமத்தை சேர்ந்த ராமமூர்த்தி, சுந்தரமூர்த்தி உட்பட்ட 10 விவசாயிகள் பசுந்தாள் உர விதைகளை விதைத்து பத்து நாள் ஆனது ஆய்வு செய்தார்.




அப்போது விவசாயிகளிடம் பசுந்தாள் உரவிதைகள் வளர்ச்சிக்கு தேவையான நீர் சந்திக்கபடுவது பற்றி கேட்டு அறிந்தார். மேலும் பயிரின் வளர்ச்சி நிலைகளில் ட்ரோன் மூலம் புகைப்படம் எடுத்து ஆவணப்படுத்தி போர்டலில் பதிவேற்றம் செய்திட கட்டுக்கொண்டார்.

வேளாண் இணை இயக்குனர் தஞ்சாவூர் சுஜாதா வட்டாரத்தில் வரப்பெற்ற பசுந்தாள் உர விதையளவு மற்றும் விநியோகம் போன்றவை குறித்து கேட்டறிந்து வேளாண் உதவி அலுவலர்கள் மூன்று தினங்களுக்குள் விநியோக பணியினை முடித்திட அறிவுறுத்தினார். பின்னர் அத்திவெட்டி கிராமத்தில் தென்னை இயற்கை விவசாயிகள் குழு உறுப்பினர்களின் இயற்கை விவசாய இடுபொருள் உற்பத்தி பணியினை ராஜம் கிருஷ்ணன் வயலில்

ஆய்வு செய்து பின் குழு உறுப்பினர்களுடன் இயற்கை விவசாயத்திற்கும் ரசாயன உரம் பயன்பாட்டிற்கும் உள்ள வரவு செலவினங்களை கேட்டறிந்தார். இயற்கை விவசாயம் செய்யும் அனைவருக்கும் இயற்கை இடுபொருள்களை விற்று வரவு செலவு வங்கியில் தொடர்வதன் மூலம் இயற்கை விவசாயத்துக்கான வளர்ச்சியை அடுத்த நிலைக்கு கொண்டு செல்ல முடியும் என எடுத்து கூறினார்.

அத்திவெட்டி தென்னை இயற்கை விவசாயிகள் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் இயற்கை விவசாய சான்றிதழான ஸ்கோப் சான்றிதழை வேளாண் இயக்குனர் அலுவலக வேளாண் துணை இயக்குனர் கலாதேவி மற்றும் தஞ்சை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சுஜாதா ஆகியோர் வழங்கினர்.

வேளாண் உதவி இயக்குனர் திலகவதி மற்றும் விதை சான்றளிப்பு துறை வேளாண் அலுவலர் சங்கீதா அத்திவெட்டி இயற்கை விவசாய இடுபொருள் மையம் பற்றி விளக்கி கூறினர். வேளாண் அலுவலர் இளங்கோ குழுவின் செயல்பாடுகள் பற்றி விளக்கி கூறினார். வேளாண் உதவி அலுவலர் சுரேஷ் குழு பதிவேடுகள் பராமரிக்கப்படுவதை ஆய்வுக்கு காண்பித்தார். வேளாண் உதவி அலுவலர் தினேஷ் மற்றும் சுரேஷ் ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.




அத்திவெட்டி ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் மற்றும் அத்திவெட்டி தென்னை இயற்கை விவசாயிகள் குழு தலைவர் வைரவ மூர்த்தி பொருளாளர் வடிவேல் மூர்த்தி மற்றும் செயலாளர் பாலசுப்பிரமணியன் மற்றும் முன்னோடி விவசாயிகள் ராஜம் கிருஷ்ணன் மணி முத்து ஹிட்லர் ராமமூர்த்தி குமார் மற்றும் தங்க குமரவேலு உள்ளிட்ட விவசாயிகள் கலந்து கொண்டு அரசின் மூலம் இயற்கை விவசாயம் செய்யும் குழு உறுப்பினர்களுக்கு நாட்டு மாடு ஒன்று கிடைத்தால் சிறப்பாக இருக்கும் என்ற கோரிக்கையை வழங்கினர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அத்திவெட்டி ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் இயற்கை விவசாயிகள் குழு நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# ஒழுங்குமுறை விற்பனை கூடம் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்த விவசாயிகள் பயிற்சி

புதுக்கோட்டை, ஜூலை 11

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரம், கோங்குடி கிராமத்தில் 40 முன்னோடி விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் செயல்பாடுகள் அதன் நன்மைகள் அதை விவசாயிகள் பயன்படுத்தும் முறைகள் குறித்த ஒரு நாள் பயிற்சி வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்திம் 2024-2025 கீழ் வழங்கப்பட்டது. பயிற்சியில் வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறையின் வேளாண்மை அலுவலர் கந்தகிரி வாசன் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் செயல்பாடுகள் குறித்தும் மேலும் வேளாண் வணிகத்துறையின் சார்பாக செயல்படுத்தக்கூடிய மானிய திட்டங்கள் பற்றியும் அதை விவசாயிகள் பெறுவதற்கான வழிமுறைகள் பற்றியும் எடுத்துக் கூறினார். அறந்தாங்கி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தினுடைய கண்காணிப்பாளர் குணசேகரன் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தினால் கிடைக்கக்கூடிய நன்மைகள் உற்பத்தி பொருள்களில் கடன் பெறுவது போன்ற செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் விற்பனை துறையின் உதவி வேளாண்மை அலுவலர் பிரபாகரன் கலந்து கொண்டு திட்ட செயல்பாடுகள் பற்றியும் கிராம மக்களுக்கு எவ்வாறு வேளாண் வணிகத்துறை உறுதுணையோடு செயல்படுகிறது என்ற வியங்களை எடுத்துக் கூறினார். பயிற்சியில் அறந்தாங்கி வேளாண்மை உதவி இயக்குனர் பத்மப்ரியா கலந்து கொண்டு வேளாண் துறை சார்ந்த திட்டங்களையும் நடப்பு பருவத்தில் விவசாயிகள் மண் மாதிரி சேகரித்தல் விதை நேர்த்தி நுண்ணுயிர் உரங்கள் பயன்பாடு நெல்நுண் சத்து பயன்பாடு குறித்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் மகேந்திரன் கலந்து கொண்டு கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் உடைய செயல்பாடுகள் பற்றி எடுத்துக் கூறினார். பயிற்சியில் விவசாயிகள் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் பயிர் காப்பீடு செய்யுமாறு அறிவுரை வழங்கப்பட்டது. பயிற்சியினை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சரவணன் மற்றும் வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆனந்த ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தென்னை பயிரைத் தாக்கும் கரையான் (ஓடன்டோடெர்மஸ் ஒபிஸஸ்) தாக்குதலின் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை

**தாக்குதலின் அறிகுறிகள்**

1. ஆண்டு முழுவதும் இதன் தாக்குதல் இருந்தாலும் ஜுன் முதல் செப்டம்பர் வரை அதிகமாக இருக்கும்.

2. கன்றுகளை நட்ட இளம் பருவத்தில் கரையானின் தாக்குதல் அதிக அளவில் இருக்கும்.

3.மரத்தின் அடிப்பாகங்களில் மணல் கலந்த மண்ணினால் ஆன வரிகள் ஒட்டியிருப்பது இதன் அறிகுறியாகும்.

**பூச்சியை அடையாளம் காணுதல்**

1. முதிர்ந்த கரையான்கள்: சிறிய மஞ்சள்-வெள்ளை நிறத்திலான பூச்சிகள் பெருங்குழுவாக வசிக்கும்.

2. இக்குழுவானது அரசன், அரசி, வேலையாட்கள் மற்றும் போர்வீரர்கள் போன்ற பலவகைப் பூச்சிகளைக் கொண்டிருக்கும்.

**மேலாண்மை**

**உழவியல் முறைகள்**

1.தென்னந்தோப்பிற்குள்ளோ அல்லது அருகிலோ கரையான் கூடுகள் இருந்தால் கண்டுபிடித்து அழிக்கவும்.

2.அங்கக உரங்கள் மட்காமல் இருப்பின் அவற்றை அகற்றி சரியான வடிகால் வசதி அமைத்தல் வேண்டும்.

3. நாற்றங்காலில் வளரும் நாற்றுகளின் காய்கள் மணல் கொண்டு மூடப்படவேண்டும்.

**இராசயன முறை**

காப்பர் சல்பேட் 1% (அ) முந்திரி ஓட்டு எண்ணெய் 80% (அல்லது) குளோர்பைரிபாஸ் 3 மி.லி / லி நீரில் கலந்து வேப்ப எண்ணெய் 5% (அ) வேப்பங்கொட்டைத்தூள் 20% கலந்து தெளிப்பதன் மூலம் தென்னை ஓலைகளைக் கரையான் தாக்காமல் தடுக்கலாம். மரத்தின் அடிப்பகுதியில் சுண்ணாம்பு கரைசலைப் பூசுவதன் மூலமும் தடுக்கலாம்.

வேப்ப எண்ணெய் கலந்து வளர்ந்த மரத்தில் தரையிலிருந்து 2 மீ உயரம் வரை தண்டுப்பாகத்தில் பூசுவதன் மூலமும் கரையான் தாக்காமல் தவிர்க்க இயலும் என அயோத்தியாப்பட்டணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் த.சரஸ்வதி கேட்டுக் கொண்டுள்ளார்.

# 'தாரமங்கலம் வட்டாரத்தில் 2024 காரீஃப் பருவ பயிர் சாகுபடி விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர அழைப்பு

தாரமங்கலம் வட்டாரத்தில் கீழ்கண்ட பயிர்களுக்கு காரீப் 2024 பருவத்தில் காப்பீடு செய்யப்படவுள்ளன. எனவே, விவசாயிகள் இயற்கை சீற்றங்களால் பயிர்களுக்கு ஏற்படும் மகசூல் இழப்புகளிலிருந்து பாதுகாத்திட தங்களது பயிர்களை காலக்கொடு தேதிக்கு முன்னரே காப்பீடு செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| பயிர் | பயிர் காப்பீடு செய்ய காலக்கெடு | காப்பீட்டுத் தொகை ஏக்கருக்கு (ரூ) | பிரிமியம் சதவீதம் | பிரிமீயத் தொகை ஏக்கருக்கு (ரூ) |
|---|---|---|---|---|
| சோளம் | 16.08.24 | 9,683/- | 2 | 194/- |
| நிலக்கடலை | 16.08.24 | 21,044/- | 2 | 421/- |
| இராகி | 30.08.24 | 11,263/- | 2 | 226/- |

விவசாயிகள் நடப்பு பசலி ஆண்டுக்கான அடங்கலை கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்று அதனுடன் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ, இ சேவை மையங்களிலோ அல்லது வணிக வங்கிகளிலோ சென்று பதிவு செய்து கொள்ளலாம்.

எனவே, விவசாயிகள் இயற்கை நிகழ்வுகளால் ஏற்படும் பயிர் இழப்பிற்கு முன், இத்திட்டத்தில் தங்களது பயிர்களை காப்பீடு செய்து கொள்ளவும், இது குறித்தான விபரங்களுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆகியோரை தொடர்பு கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு விவசாயிகள் அனைவரும் தங்கள் அருகிலுள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தினை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# அரியாணிப்பட்டி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக் குழுவிற்கான விவசாயிகள் பயிற்சி

புதுக்கோட்டை, ஜூலை 11

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்கத் திட்டத்தின் கீழ் அரியாணிப்பட்டி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக் குழுவிற்கான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

துணை வேளாண்மை அலுவலர் வெற்றிச்செல்வன் பேசுகையில் வேளாண்துறை மூலம் செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்களான கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், பி.எம்.கிசான் திட்டம் மற்றும் நுண்ணூட்டத்தின் அவசியம் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக்கூறினார். மேலும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் மற்றும் அதன் செயல்பாடுகள் திட்டத்தில் வழங்கப்படும் இடுபொருட்கள் தரிசு நில தொகுப்பு மூலம் பாசன வசதி அமைத்தல் பற்றி எடுத்துக் கூறினார்.

உதவி தோட்டக்கலை அலுவலர் ஜெயராஜ், தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் சௌந்தர்ராஜ், வேளாண் வணிகம் மற்றும் வேளாண் விற்பனைத்துறையில் செயல் படுத்தப்படும் உலர் களம் மற்றும் குடோன் அமைப்பது பற்றியும் பண்ணை வாயில் வர்த்தகம் மற்றும் மின்னனு தேசிய வேளாண் சந்தை பற்றி விவசாயிகளுக்கு கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சங்கீதா, அட்மா திட்டத்தில் செயல் படுத்தப்படும் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். பயிற்சியின் இறுதியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தோட்டக்கலை அலுவலர் ஜெயராஜ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கீதா மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந் தனர். இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளின் சந்தேகங்களுக்கு நேரடியாக விளக்கம் அளிக்கப்பட்டது.